DVC 12/2022
Pw1– ஜோதி
Date : 20.06.2025

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் மூன்று நபர்கள் ஆவார்கள். 1. கவிதா, 2. பாண்டியம்மாள், 3. கார்த்தி ஆகியோர்கள் ஆவார்கள்.

2. பொதுவாக திருவாடானை ஆதிரெத்தினேஸ்வரர் கோவிலில் திருமணம் நடைபெற்றால் அதற்குரிய சான்றிதழ் வழங்குவார்கள் என்றால் சரிதான். எனக்கும் 1ம் மனுதாரருக்கும் திருவாடானை ஆதிரெத்தினேஸ்வரர் கோவிலில் நடைபெற்ற திருமணத்திற்குரிய சான்றிதழை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்களுக்கு கொரனா காலகட்டத்தில் அவசர அவசரமாக திருமணம் நடைபெற்றதால் சான்றிதழ் வாங்க இயலவில்லை.

3. எனக்கு எழுதபடிபக்க தெரியும் என்றால் சரிதான். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கொரான காலத்திற்கு பிறகு மேற்படி திருவாடானை ஆதிரெத்தினேஸ்வரர் கோவிலில் எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கு அங்கு சென்று சான்றிதழ் கேட்டு பெறவில்லை என்றால் சரிதான்.

4. நான் இவ்வழக்கை எத்தனை நபர்கள் மீது தொடுத்துள்ளேன் என்றால் ஏழு நபர்கள் மீது தொடுத்துள்ளேன். எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணம் 2ம் திருமணம் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல, நான் கூறியுள்ளேன்.

5. எங்களுக்கு எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் 14.06.2021ல் நடைபெற்றது. மேற்படி திருமணம் நடைபெற்ற சமயத்தில் கொரானாவால் ஊரடங்கு

உத்தரவு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி திருமணம் நடைபெற்ற சமயத்தில் கொரானவால் திருமணம் முதலிய பொது நிகழ்ச்சிகளுக்கு அரசால் தடை விதிக்கப்பட்டிருந்தது என்றால் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் மேற்படி நிகழ்ச்சிகளுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது, பிற தினங்களில் தடை விதிக்கப்படவில்லை, ஆனால் திருமண சான்றிதழ் மட்டும் பெற முடியவில்லை.

6. நான் எப்போது 1ம் எதிர்மனுதாரர் மீது திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் திருமணம் முடிந்து சுமார் 6 முதல் 7 மாதங்களில் புகார் அளித்தேன். நான் திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1ம் எதிர்மனுதார மீது அளித்த புகார்மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

7. நான் 1ம் எதிர்மனுதாரருடன் திருமணம் முடிந்து எத்தனை நாள்கள் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சுமார் மூன்று மாத காலம் சேர்ந்து வாழ்ந்தேன். நானும் 1ம் எதிர்மனுதாரரும் திருமணம் முடிந்து எங்கு சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் முதலில் கைகாட்டியில் வாடகை வீடு எடுத்து குடியிருந்தோம், அதன்பின் 1ம் எதிர்மனுதாரர் கோயம்புத்துாரில் ஹோட்டல் வைத்திருந்ததால் அங்கு சென்றுவிட்டோம்.

8. நான் 1ம் எதிர்மனுதாரருடன் 3 மாத காலம் சேர்ந்து வாழ்ந்த பின்பு தான் திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் மீது புகார் அளித்தேன் என்றால் சரிதான். மேற்படி புகார் அளித்த தேதி என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது**

Taken down by me/before me in
open court,interpreted/read over

eCourts

to the witness and admitted by the deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.

Web Page